## 3-வது பகுதி

இந்நூல் ஆசிரயரான எனக்கும், ஸ்ரீ பூண்டி மகான் ஆற்று சுவாமிகளுக்கும் இருந்த நேரடித் தொடர்பு குறித்து 3வது பகுதியாக எழுதுகிறேன்.

எனது சொந்த ஊர் திருவண்ணாமலை. என் வீட்டிற்கு கலசப்பாக்கம் என்ற ஊரிலிருந்து ஒரு அம்மா வருவார். அந்த மூதாட்டி எங்கள் குடும்ப நண்பர்.

அவர் ஓர் நாள் ஸ்ரீ பூண்டி மகான் ஆற்று சுவாமிகளின் தவநிலையைப் பற்றியும், ஸ்ரீ சுவாமிகள் மலபீடத்தில் உட்கார்ந்து கடுமையான தவம் செய்வதைப் பற்றியும், ஸ்ரீ சுவாமிகள் அவதாரப் புருஷர் என்பதையும், அவருடைய மகிமையைப் பற்றியும் வியந்து என்னிடம் கூறினார்.

அந்த மூதாட்டி கூறியதைக் கேட்டு நான் ஆனந்தமும், ஆச்சரியமும் அடைந்தேன். ஸ்ரீ சுவாமிகளின் தரிசனம் காணவும், அவரின் அருள் பெறவும் அவா கொண்டேன்.

பூண்டி கிராமத்திற்கு ஒரு நாள் பயணம் செய்தேன். ஸ்ரீ சுவாமிகளின் தரிசனம் கண்டேன். நான் ஸ்ரீ சுவாமிகளை தரிசனம் செய்ய முதன் முதலில் சென்ற அந்த நாள், பிற்காலத்தில் நான் ஞானோபதேசம் பெறுவதற்கு வழி வகுக்கும் நன்னாளாக மாறப் போகிறது என்று எனக்கே தெரியாது.

முதன் முதலில் நான் ஸ்ரீசுவாமிகளின் தரிசனத்தைப் பெற்ற ஆண்டு 1969 என நினைக்கின்றேன். ஸ்ரீசுவாமிகள் பிற்காலத்தில் என்னை ஆட்கொண்டு ஞானப் பாதைக்கு வழிகாட்டுவார் என்று எனக்கு தெரியாது.

நான் முதலில் ஸ்ரீ சுவாமிகளை தரிசனம் செய்த போதே, ஸ்ரீ பூண்டி மகான் ஆற்று சுவாமிகள்தான் எனக்கு ஞான குருவென்றும், கடவுள் என்றும் மனத்தில் பதிய வைத்துக் கொண்டேன்.

அந்த சமயம் நான் ஆரணியில் கூட்டுறவு சார்பதிவாளராக (Co-Operative Sub – Registrar) பணிபுரிந்து வந்தேன், ஸ்ரீ சுவாமிகளை தரிசனம் கண்டதிலிருந்தே நான் அவருடைய நினைவாகவே வாழ்ந்து வந்தேன். எந்தப் பணியை செய்தாலும் ஸ்ரீ சுவாமிகளை நினைத்துதான் செய்வேன்.

எங்கு சென்றாலும், யாரிடம் பேசினாலும், ஸ்ரீ சுவாமிகளின் மகிமையைப் பற்றி பேசுவதே என் நித்திய வாழ்க்கையாக அமைந்தது. அடிக்கடி, காலம் நேரம் இல்லாமல் ஸ்ரீ சுவாமிகளை தரிசனம் செய்வதற்கு பூண்டிக்கு செல்வேன். ஆனால், என் கடமை (அரசு பணி) எனக்கு தடையாக இருந்தது. இருப்பினும், சந்தர்ப்பம் வாய்க்கும்போதெல்லாம் ஸ்ரீ சுவாமிகளை நான் தரிசனம் செய்யத் தவறியதில்லை.

ஸ்ரீ சுவாமிகளின் சந்நிதியில் ஒவ்வொரு ஆண்டும் சித்திரை பௌர்ணமி வழிபாடும், தைப்பூச வழிபாடும் நடக்கும். அந்த விழாக்களில் நான் தவறாமல் கலந்து கொள்வேன். மாத பௌர்ணமி பூசையும் நடைபெறும். அதிலும் நான் கலந்து கொண்டு வழிபாட்டில் ஈடுபடுவேன். முக்கியமான வழிபாடுகளில் ஸ்ரீ சுவாமிகளின் சந்நிதிக்கு சென்று கலந்து கொள்வேன். ஸ்ரீ சுவாமிகளின் தரிசனத்திற்காக பூண்டிக்கு வந்து போகும் போதெல்லாம் அன்றே ஊர் திரும்பியது கிடையாது. அப்படி திரும்புவதற்கும் என் மனம் இடம் தராது. அதற்குக் காரணம் ஸ்ரீ சுவாமிகள் என்மீது வைத்த அன்பும் கருணைப் பார்வையும் தான். ஊரை விட்டு திரும்பும்போது, ஸ்ரீசுவாமிகளின் உத்தரவு பெறாமல் திரும்பியது கிடையாது.

1969ம் ஆண்டிலிருந்து 1978 ஆம் ஆண்டு வரை (அதாவது ஸ்ரீ சுவாமிகளின் சமாதி அடைந்த ஆண்டு வரை) என் வாழ்நாட்கள் மிகவும் பயனுள்ள நாட்களாகவும், அன்பும், அமைதியும் நிறைந்த நாட்களாகவும் இருந்தது. அன்றும், இன்றும், என்றும் ஸ்ரீ சுவாமிகளின் அன்பும், கருணையும் அவருடைய அருட்பார்வையும் என் இதயத்தில் நிலைத்து பதிந்து விட்டது.

பூண்டியில் வாழும் பக்தர்களும், பிற ஊர்களிலிருந்தும் வரும் பக்தர்களும், என் மீது அன்பு செலுத்தினார்கள். திரு. சுப்பிரமணிய சாமியும், திரு. விஜயரங்கன் அவர்களும் என்னிடம் நெருங்கி பழகி என்மீது அன்பு செலுத்தினார்கள். இவர்கள் காட்டிய அன்பை என்னால் என்றும் மறக்க முடியாது.

நான் பூண்டிக்கு வந்து ஸ்ரீசுவாமிகளின் தரிசனம் பெறும் போதெல்லாம், திரு. சுப்பிரமணிய சாமியும், திரு. விஜயரங்கன் அவர்களும் உடன் இருப்பார்கள்.

நான் பூண்டியில் இல்லாத போதும், திரு. விஜயரங்கன் அவர்கள் என்மீது வைத்த அன்பு, அபிமானம் இவைகளின் காரணமாக என்னைப் பற்றி ஸ்ரீ சுவாமிகளிடம் கேள்விகள் கேட்பார். நான் பூண்டிக்கு வரும்போது, ஸ்ரீ சுவாமிகளிடம் என்னைப் பற்றி பேசிய விஷயங்களை சிறிதும் விடாமல் அப்படியே என்னிடம் தெரிவிப்பார்.

ஸ்ரீ சுவாமிகள் பேசிய விஷயங்களை நாங்கள் இருவரும் நினைத்து நினைத்து மகிழ்வதுண்டு. திரு. விஜயரங்கன் சிவ பதவியடைந்து விட்டார். இப்போது நம்மிடம் அவர் இல்லை. இருப்பினும் ஸ்ரீ சுவாமிகளிடம் அவர் உரையாடிய விஷயங்களும், அவர் கைப்பட எழுதித் தந்த விஷயங்களும் நம்மிடம் உள்ளது.

என்னைப் பற்றி ஸ்ரீ சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளி நான் எழுதியுள்ள விஷயங்களெல்லாம் திரு.விஜயரங்கன் அவர்கள் எழுதிக் கொடுத்த குறிப்பே. நான் கற்பனையாக எதையும் எழுதவில்லை என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இதற்காக திரு. விஜயரங்கன் அவர்களுக்கு நான் மிக்க நன்றி தெரிவிப்பதுடன், நான் அவருக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.

திரு. சிவகாந்தன் அவர்கள் எழுதியுள்ள "ஸ்ரீ பூண்டி மகான் வரலாறு" என்ற நூலில் திரு. விஜயரங்கன் அவர்களைத் "தாடி வைக்காத யோகி" என்று குறிப்பிட்டுள்ளது மிகவும் போற்றத்தக்க விஷயம். காரணம் ஸ்ரீ சுவாமிகளிடம் அவர் மிகவும் பக்தியுடனும் விசுவாசமாகவும் இருந்தார்.

திரு. விஜயரங்கன் அவர்கள் தன் சொந்த விஷயங்களைப் பற்றி ஸ்ரீ சுவாமிகளிடம் பேசியபோது, ஸ்ரீ சுவாமிகள் அதற்கு பதில் கூறிய சில விஷயங்களை இங்கு குறிப்பிடுகிறேன்.

## திரு. விஜயரங்கன் வீட்டில் நகைகளவு போன விவரம்

திரு. விஜயரங்கன் அவர்கள் தினசரி காலையில் ஸ்ரீ சுவாமிகள் இருக்கும் ஸ்ரீ சுவாமிகள் இருக்கும் இடத்தில் ஸ்பீக்கர் செட் வைத்து பக்தி பாடல்கள் போடுவார். ஒரு நாள் இரவு அவர் வீட்டில் தூங்கிக் கொண்டு இருந்தபோது நகைப்பெட்டி ஒன்று களவு போய்விட்டது. அவர் காலையில் எழுந்து நகைப்பெட்டி காணாமல் போனதை தெரிந்து கொண்டு வழக்கம்போல் காலையில் ஸ்பீக்கர் செட் வைத்து பக்தி பாடல்கள் போட்டு விட்டு ஸ்ரீசுவாமிகளிடம் வந்து நின்றார்.

நகை திருடு போன விஷயத்தைப் பற்றி ஸ்ரீ சுவாமிகளிடம் திரு. விஜயரங்கன் கேட்பதற்கு முன்பே, திரு. விஜயரங்கனைப் பார்த்து ஸ்ரீ சுவாமிகள் சொன்னதாவது.

பள்ளியில் தூங்கியவன் கல்வியிழந்தான்: படுக்கையில் தூங்கியவன் பெட்டியிழந்தான்; என்று நகை திருடு போன விஷயத்தை நகைச்சுவையாக சொன்னார். நகைப்பெட்டியை எடுத்துக் கொண்டு போன நபர் யார் என்று திரு. விஜயரங்கன் தெரிந்து கொள்ள விரும்பிய போது ஸ்ரீ சுவாமிகள் மேலும் நகைச்சுவையாக "நகைப்பெட்டியை எடுத்துக் கொண்டு போன அந்த ஆள் நேற்று என்னிடம் விபூதி வாங்கி கொண்டு போனார்-பா" என்று சொன்னார்.

சாமி! நகை கிடைக்குமா? கிடைக்காதா? என்று கேட்டுவிட்டு, போலீஸில் புகார் கொடுக்கட்டுமா? என்று திரு. விஜயரங்கன் கேட்டார். அதற்கு ஸ்ரீ சுவாமிகள் புகார் கொடுத்துதான் பாரேன் என்று கூறினார். வீட்டிற்கு வந்திருந்த உறவினர்களில் ஒருவரே நகையை எடுத்துச் சென்றதாக பின்னால் திரு. விஜயரங்கன் தெரிந்து கொண்டார்.

## திரு. விஜயரங்கன் சென்னை சென்ற விவரம்

திரு. விஜயரங்கன் சென்னை செல்வதற்கு முடிவெடுத்து விட்டு, ஸ்ரீ சுவாமிகளிடம் வந்த சொன்னதாவது,

சாமி! என் குடும்பம் நடத்த வருமானம் எதுவும் கிடைக்கவில்லை. நான் சென்னை சென்று ஏதாவது தொழில் செய்யலாம் என்று இருக்கிறேன். எனக்கு பூண்டியில் யாருடைய தயவும் வேண்டாம் என்று நகைச்சுவையாக திரு. விஜயரங்கன் தெரிவித்தார்.

அப்போது ஸ்ரீ சுவாமிகள் "வேண்டாம்பா !அப்படி சொல்லாதே ! சிறு துரும்பும் பல் குத்த உதவும்" என்று சொன்னார்.

## சென்னை ஆட்டோவில் ஸ்ரீ சுவாமிகளின் படம்

பிறகு திரு. விஜயரங்கன் ஒருநாள் சென்னை சென்றார். ஒரு குறிப்பிட்ட இடத்தில் சென்னையில் இறங்கினார். ஒரு ஆட்டோ ரிக்ஷாவை அழைத்தார். என்ன ஆச்சரியம் ! அவர் அழைத்த ஆட்டோ ரிக்ஷாவில் ஸ்ரீபூண்டி மகான் படம் மாட்டியிருந்தது. திரு. விஜயரங்கன் அதைப்பார்த்து மகிழ்ச்சியடைந்தார். சென்னை வந்தும் ஸ்ரீ சுவாமிகளின் நினைப்பு மாறாமல் இருக்கவே ஸ்ரீ சுவாமிகள் நமக்கு இங்கு குறிப்பிட்ட ஆட்டோ ரிக்ஷாவை அனுப்பியுள்ளார் என்று நினைத்து திரு. விஜயரங்கன் வியந்து போனார்.

## வடாற்காடு மாவட்டம், ஆரணி என்ற ஊரில் என் வீட்டிற்கு வர ஸ்ரீ சுவாமிகளிடம் விலாசம் கேட்டது.

ஆரணியில் நான் குடியிருந்தபோது சில நாட்கள் தொடர்ச்சியாக நான் பூண்டிக்கு செல்லாமல் இருந்துவிட்டேன். இதனால் திரு. விஜயரங்கன் அவர்கள் மனம் பாதித்தது. என்னை உடனே பார்க்க வேண்டும் என்று நினைத்தார். ஆனால் என்னுடைய விலாசம் அவரிடம் இல்லை. எனவே ஸ்ரீசுவாமிகளிடம் கேட்கலாம் என முடிவு செய்தார்.

ஸ்ரீ சுவாமிகளிடம் வந்து நின்று சாமி! E.O.(C) சார். (Extension Officer (Co-operation)) கூட்டுறவு விஸ்தரிப்பு அதிகாரி விலாசம் என்ன என்று கேட்டார். நான் அவரைப் பார்க்க வேண்டும் என தெரிவித்தார்.

அதற்கு ஸ்ரீ சுவாமிகள் சொன்ன பதில் : "ஆரணியில் இறங்கியதும் போலீஸ் ஸ்டேஷன் போப்பா. போலீஸ் ஸ்டேஷனுக்கு பக்கத்து தெருவில் போய் திரும்பியவுடன் ஒரு பங்கு கடை இருக்குப்பா. அங்கிருந்து பார்த்தால் தென்னை மரங்கள் தெரியும்பா! அந்த தென்னை மரங்கள் உள்ள வீடுதாம்பா E.O.(C) வீடு என்று ஸ்ரீ சுவாமிகள் சொன்னார். ஸ்ரீ சுவாமிகள் தெரிவித்த இந்த விவரங்களை வைத்துக் கொண்டே திரு. விஜயரங்கன் என் வீட்டிற்கு வந்து சென்றார். ஸ்ரீ சுவாமிகள் தெரிவித்த இந்த விவரங்களை வைத்துக் கொண்டே திரு.விஜயரங்கன் என் வீட்டிற்கு வந்து சென்றார். ஸ்ரீ சுவாமிகள் கடவுள் ஆயிற்றே ! அவருக்கு தெரியாத விஷயம் உண்டா? என்று நாங்கள் வியந்து போனோம். ஸ்ரீ சுவாமிகள் என் வீட்டிற்கு எத்தனை முறை வந்து சென்றாரோ? யாருக்கு தெரியும்? ஸ்ரீ சுவாமிகள் தன் பக்தர்களிடம் வந்து சென்று அவரவருடைய குறைகளை கண்டறிவதுடன், அவரவருடைய பிரார்த்தனைக்கு செவிசாய்த்து நன்மைகள் செய்து வந்தார் என்பதற்கு இதைவிட என்ன ஆதாரம் வேண்டும்?"

## திரு. விஜயரங்கன் அவர்கள் என்னைப் பற்றி கேட்ட கேள்விகளும், அதற்கு ஸ்ரீ சுவாமிகள் சொன்ன பதில்களும்

**கேள்வி:** ஒரு நாள் திரு.விஜயரங்கன் ஸ்ரீ சுவாமிகளிடம் வந்து நின்று, சாமி! E.O.(C) சார் என்ன செய்கிறார் என்று கேட்டார்?

**ஸ்ரீ சுவாமிகள் சொன்ன பதில் :** அவர் "ஏரியிலே பிரார்த்தனை, வீட்டிலே தீபார்த்தனை" என்று நகைச்சுவையாக பதில் அளித்தார்.

## ஸ்ரீ சாமிகள் கூறியதின் விளக்கம்

நான் ஆரணியில் குடும்பம் வைத்திருந்தேன். அப்போது ஆரணியில் பஞ்சாயத்து ஒன்றியத்தில் E.O.(C) என்ற பதவியில் இருந்தேன். என்னுடைய அலுவலக பணி முடிந்ததும் ஆரணியில் உள்ள பையூர் ஏரிக்கு தினமும் இரவு சுமார் 7.00 மணிக்கு செல்வேன். அங்கு உட்கார்ந்து கொண்டு ஸ்ரீ பூண்டி மகான் ஆற்று சுவாமிகளின் (சற்குரு நாதரின்) மீது இயற்றிய தோத்திரப் பாடல்களைப் பாடி பிரார்த்தனை செய்வேன். அப்போது ஏரியில் உள்ள தண்ணீரில் ஒரு மூலையில் ஜோதி தரிசனம் தெரியும். அதை பக்தியுடன் உற்று நோக்கும்போது அந்த ஜோதி தண்ணீரில் மிதந்து நகர்ந்து செல்லும். அந்த ஜோதிக்கு எதிர்திசையில் பார்க்கும்போது அங்கு இன்னொரு ஜோதி தரிசனம் தெரியும். இந்த ஜோதியும் நகர்ந்து செல்லும் இரண்டு ஜோதிகளும் இணைந்து, மறுபடியும் பிரிந்து அதன் அதன் வழியில் செல்லும். இந்த தெய்வீக காட்சியை தரிசனம் செய்து கொண்டே ஸ்ரீ குருநாதர் மீது மிகவும் விசுவாசமாக பிரார்த்தனைகள் செய்வேன். அதன் பிறகு வீட்டிற்கு வந்து அதே மூச்சில் ஸ்ரீ சுவாமிகளின் திருவுருவப் படத்திற்கு கற்பூர தீபாராதனைக் காட்டி பக்தி செலுத்தி வழிபடுவேன். இந்த சம்பவத்தைத்தான் தினமும் ஸ்ரீ சுவாமி கண்காணித்து வந்தார் எனத் தெரிகிறது. இந்த சம்பவத்தைத்தான் திரு. விஜயரங்கன் அவர்களிடம் ஸ்ரீ சுவாமிகள் தனக்கே உரிய பரியபாஷையில் E.O.(C) "ஏரியில் பிரார்த்தனை, வீட்டில் தீபாராதனை" என்று திருவாய் மலர்ந்தருளினார். இந்த சம்பவத்தை ஸ்ரீ சுவாமிகளே நடத்திவிட்டு, ஸ்ரீ சுவாமிகளே திரு.

விஜயரங்கத்தை கேள்வி கேட்க வைத்து, ஸ்ரீ சுவாமிகளே பதில் அளித்தார் என்றால், இதைவிட புண்ணியம் இந்த ஜென்மத்தில் எனக்கு என்ன இருக்க முடியும் ? சிந்திப்பீர்கள் !

**கேள்வி:** சுவாமி E.O.(C) சார் (சுந்தர்ராஜன்) நிலை என்ன?

**ஸ்ரீ சுவாமிகளின் பதில்:** அவர் எரிக்கரும்பு. நான் கிணர் வெட்ட வேண்டும். ஜம்ப்பர் மருந்து வாங்க வேண்டும், விரை கொடுத்தேன் அதை சரியாக விதைக்கவில்லை. முளைக்கவில்லை, நான் என்ன செய்வது, பண்பட்ட நிலம், விதி யாரையும் விடாது. விந்து விஷம் ஆகிவிட்டது.

**கேள்வி :** சாமி E.O.(C) சார் எதற்காக தங்களின் தரிசனத்திற்கு அடிக்கடி வந்து செல்கிறார்?

**ஸ்ரீ சுவாமிகளின் பதில் :** அவர் எல்லோரும் நலம் பெற வாழ பூசை செய்கிறார் – பா.

08-01-1971 ம் தேதியில் திரு. விஜயரங்கன் அவர்கள் ஸ்ரீ சுவாமிகளிடம் கேட்ட கேள்வி:

**கேள்வி:** சாமி E.O.(C) சார் என்ன செய்கிறார்?

**ஸ்ரீ சுவாமிகளின பதில்:** அவரும், அவர் நண்பரும், காஞ்சிபுரம் சாமியும். எல்லோரும் 5 டீ, பிரியாணி எல்லாம் சாப்பிட்டு விட்டு பாட்டு பாடறாங்கப்பா.

## விளக்கம்

நான் ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் காண்பது போலவே சில சமயங்களில், காஞ்சிபுரம் சென்று ஸ்ரீ ஏகாம்பர ஈஸ்வரர் கோவிலில் தவமிருக்கும் மகான் ஸ்ரீ சிவசாமி சுவாமிகளையும் தரிசனம் காண்பதுண்டு.

08-01-1971ம் தேதி ஸ்ரீ சிவசாமி சுவாமிகளின் தரிசனம் காண்பதற்கு அவரிடம் சென்றேன். அப்போது ஸ்ரீ சுவாமிகள் என்னை பிரியாணி வாங்கி வருமாறு சொன்னார். நான் உடனே பிரியாணி வாங்கிக் கொண்டு, மீண்டும் ஸ்ரீ சுவாமிகளிடம் சென்றேன்.

நான் மாமிசம் சாப்பிடுவதில்லை. இருப்பினும் மகான் சொல்லை புறக்கணிக்காமல் வாங்கி வந்தேன். நான் மகானுக்கு பிரியாணி கொடுக்கும் போது, என்னையும் சாப்பிடுமாறு சொன்னால் என்ன செய்வது என்று சிந்தித்தேன். இதையறிந்து கொண்ட ஸ்ரீ சுவாமிகள், என்னை போடா ! போடா ! என்று சொன்னார். நான் அவருக்கு எப்படியும் பிரியாணி கொடுக்க வேண்டும் என்ற முயற்சியில நின்றிருந்தேன்.

பிறகு, ஸ்ரீ சுவாமிகள் அமர்ந்தார். நானும் அமர்ந்து கொண்டேன். ஸ்ரீ சுவாமிகள் என்னை பிரியாணி பொட்டலத்தை பிரிக்குமாறு சொன்னார். நான் பிரியாணி பொட்டலத்தை பிரித்து வைத்தேன். ஸ்ரீ சுவாமிகள் பிரியாணியிலுள்ள மாமிசத்தை தள்ளிவிட்டு, சாதத்தை மட்டும் எடுத்து சாப்பிட்டார். என்னையும் எடுத்து சாப்பிடுமாறு சொன்னார்.

ஸ்ரீ சுவாமிகளின் உத்தரவை மீற எனக்கு மனமில்லை. சாதத்தை நானும் எடுத்து சாப்பிட ஆரம்பித்தேன். அதற்கு முன் ஸ்ரீ பூண்டிமகானை நினைத்து கொண்டு, ஐயா ! இது நீ கொடுத்த பிரசாதம் என்று நினைத்து சாப்பிட்டேன். என்னுடன் வந்த நண்பரும் சாப்பிட்டார். டீ வாங்கி சாப்பிட்டோம். பிறகு ஸ்ரீ பூண்டி மகான் தோத்திர பாடல்களை நான் பாடினேன்.

பிறகு காஞ்சிபுரத்தை விட்டு பூண்டிக்கு புறப்பட்டு சென்றேன். காஞ்சபுரத்தில் பிரியாணி சாப்பிட்ட சூழ்நிலையை ஸ்ரீ பூண்டி மகானிடம் தெரிவிக்கலாம் என்று நினைத்திருந்தேன். ஸ்ரீ பூண்டி மகானிடம் தெரிவிக்கலாம் என்று நினைத்திருந்தேன். பஸ்ஸை விட்டு இறங்கி ஸ்ரீ பூண்டி மகானிடம செல்வதற்கு முன்பு, திரு. விஜயரங்கன் என்னைச் சந்தித்தார்.

நான் என்ன செய்து கொண்டிருக்கின்றேன் என்று ஸ்ரீ பூண்டி மகானிடம் கேள்வி கேட்டதாகவும், நானும், என் நண்பரும் காஞ்சிபுரம் சுவாமிகளும், பிரியாணி சாப்பிட்டுவிட்டு, டீ சாப்பிட்டு விட்டு, பாட்டு பாடியதாக ஸ்ரீ சுவாமிகள் தெரிவித்தார் என்று திரு. விஜயரங்கன் சொன்னார்.

*ஸ்ரீ பூண்டி மகான் ஆற்று சுவாமிகளுக்கும் எனக்கும் பூர்வீகத்தில் என்ன தொடர்பென்று தெரியாது. ஆனால் இந்த ஜன்மத்தில் என் மீது சுவாமிகள் காட்டிய கருணை, வெள்ளமாக ஓடியது. அந்த கருணை எனக்கு எப்போதும் உண்டு. அதன் விளக்கத்தை இப்போது பார்ப்போம்.*

## ஸ்ரீ சுவாமிகள் அவருடைய திருவடிகளைத் தூக்கி காண்பித்தது.

நான் பூண்டிக்கு வரும்போதெல்லாம் இரவு தங்காமல் சென்றது கிடையாது. ஒரு நாள் இரவு ஸ்ரீ பூண்டி சற்குருநாதர் சந்நிதியில் தங்கியிருந்த போது, எனக்கு தூக்கம் வரவில்லை. எனவே தூங்காமல் உட்கார்ந்து கொண்டு ஸ்ரீ சுவாமிகளை நினைத்து தியானம் செய்தேன். தியானம் செய்யும்போது, ஸ்ரீ சுவாமிகளைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் எழுச்சி பெற்றது.

உடனே ஸ்ரீ சுவாமிகள் அமர்ந்திருந்த திண்ணைக்கு அருகில் சென்று, ஸ்ரீ சுவாமிகளுக்கு முன்னால் போடப்பட்டிருந்த திரையை விலக்கினேன். ஸ்ரீ சுவாமிகளை வணங்கினேன். ஸ்ரீ சுவாமிகள் நன்றாக தூங்கிக் கொண்டிருக்கிறார் என்று நினைத்தேன். ஸ்ரீ சுவாமிகள் நன்றாக தூங்கி கொண்டிருந்தாலும் அவர் விழிப்பு நிலையில் தான் உள்ளார் என்பது எனக்குத் தெரியாது.

ஸ்ரீ சுவாமிகளின் திருவடிகளுக்கு நேராக நின்று வணங்கியபடியே, “சாமி ! உங்கள் திருவடிகளால் என்னை உதைத்தால், நான் மேலுக்கு வந்து விடுவேன்” என்று பிரார்த்தனை செய்தேன். நான் நினைத்த மாத்திரத்திலேயே, ஸ்ரீ சுவாமிகள் மிக்க கருணையுடன் அருள் பாலித்து, அவருடைய ஒரு திருவடியை மிகவும் உயர்த்தி தூக்கி காண்பித்தார். ஸ்ரீ சுவாமிகள் எனக்களித்த அனுக்கிரகத்தில்தான், அன்று முதல் இன்று வரை, ஆன்மீக வாழ்வு வாழ்ந்து வருகிறேன். இந்த ஜென்மத்தில் நான் பெற்ற வரமாக கருதி வாழ்ந்து வருகிறேன்.

## ஸ்ரீ சுவாமிகள் நெடுநேரம், வாயில் வைத்திருந்த அமுதத்தைக் கொடுத்தது.

ஸ்ரீ சுவாமிகள் திண்ணையில் உட்கார்ந்து 19 ஆண்டுகளில், அவர் வாயிலிருந்து வரும் எச்சில், சளி, துப்பியதை யாரும் பார்த்தது கிடையாது. ஆரணியில் இருந்த எனது நண்பர் திரு. நமச்சிவாய முதலியார் அவர்களும், (பால் வியாபாரி என்று அழைக்கப்படுவார்) நானும் ஒருநாள் ஸ்ரீ சுவாமிகளை வணங்குவதற்கு சென்று அவரிடம் நின்றிருந்தோம். ஸ்ரீ சுவாமிகள், பக்தர்கள் ஊட்டியதை விருப்பம் இருந்தால் உண்பார். சிலசமயம் உண்ணாமல் வாயில் வைத்திருப்பார்.

அன்றைய தினம் பக்தர்கள் ஊட்டிய இனிப்பு, பழங்கள், முதலியவற்றை விழுங்காமல் ஸ்ரீ சுவாமிகள் நெடுநேரம் வாய் நிறைய வைத்துக் கொண்டிருந்தார்.

ஸ்ரீ சுவாமிகள் வாயில் உள்ளதை கீழே துப்பாமலும், விழுங்காமலும், நெடுநேரம் வாயில் வைத்துக்கொண்டு அவஸ்தைப்படுவதை நாங்கள் இருவரும் பார்த்து மனசஞ்சலம் அடைந்தோம். உடனே, வாயில் உள்ளதை கையில் துப்பிவிடுகிறீர்களா சாமி ! என்று கேட்டோம்.

திருநமச்சிவாய முதலியார், அவருடைய இரண்டு கைகளையும் ஸ்ரீ சுவாமிகளுக்கு முன்னால் நீட்டினார். வாயில் ஊறிய அமுதத்தை நமச்சிவாய முதலியாரின் இரண்டு கைகளிலும் ஸ்ரீ சுவாமிகள் உமிழ்ந்தார். நாங்கள் இருவரும் அந்த அமுதத்தை உண்பதற்கு ஸ்ரீ சுவாமிகளிடம் அனுமதி கேட்டோம். ஸ்ரீ சுவாமிகளிடம் அனுமதி கேட்டோம். ஸ்ரீ சுவாமிகள் அவருடைய தலையை அசைத்து அனுமதி தந்தார். நாங்கள் இருவரும் அந்த அமுதத்தை சமமாக பங்கிட்டு உண்டோம். இதை யாரிடமும் நாங்கள் சொல்லவில்லை. ரகசியமாகவே இருந்தது. தற்பொழுது நான் இதை வெளியிடும் சந்தர்ப்பம் வந்துள்ளது. நமச்சிவாய முதலியார் தற்பொழுது இல்லை. சிவபதம் அடைந்து விட்டார்.

ஒரு சித்த மகாபுருஷரின், தலைசிறந்த ஞானியின், கடவுள் அவதாரமாக இருந்தவரின், தரிசனம் கிடைப்பதே மிகவும் அரிது. அவருடைய வாயிலிருந்து கிடைத்த அமுதமோ அதனினும அரிது என்று சொல்லத் தேவையில்லை.

## ஸ்ரீ சுவாமிகளின் அமுதத்தை உண்டபின் என் நினைவுக்கு வந்த கருத்து

ஸ்ரீ குகை நமச்சிவாயரின் சீடர் குருநமச்சிவாயர் ஆவார். ஸ்ரீ குகை நமச்சிவாயர் அவருடைய சீடர் குருநமச்சிவாயரை அருகில் அழைத்து, ஸ்ரீ குகை நமச்சிவாயர் அவருடைய வாயில் உள்ளதை உமிழ்ந்து, குருநமச்சிவாயரிடம் கொடுத்து, ஆள் நடமாட்டம் இல்லாத இடம் நம்முடைய வயிறு ஒன்றுதான் என்று நினைத்து, குரு வாயிலிருந்து உமிழ்ந்த அமுதத்தை தன் வாயில் போட்டு விழுங்கிவிட்டார். இந்த வரலாறு ஸ்ரீ அருணாச்சலத்தில் (திருவண்ணாமலையில்) நடந்தது. இந்த செயல் ஒரு சீடன் தன் குருவிடம் எவ்வளவு பக்குவமாகவும், பக்தியாகவும் இருக்க வேண்டுமென்பதை உணர்த்துகிறதல்லவா?

## ஸ்ரீ பூண்டி மகான் சமாதி அடையும் விஷயத்தை திரு. சுப்பிரமணிய சாமியிடமும் என்னிடமும் தெரிவித்தது.

1978ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகையை கொண்டாட நான் திருவண்ணாமலை சென்றிருந்தேன். தீபாவளி பண்டிகை முடிந்ததும் ஆரணிக்கு புறப்பட்டேன். நான் புறப்பட்ட தினம் புதன்கிழமை. போகும் வழியில் ஸ்ரீ சுவாமிகளின் தரிசனம் காணலாம் என்று பூண்டிக்கு சென்றேன். புதன்கிழமை இரவு பூண்டியில் தங்கினேன். இரவு படுத்ததும் தூக்கம் வரவில்லை. ஸ்ரீ சுவாமிகளின் தரிசனம் பெறலாம் என்று நினைத்தேன். உடனே ஸ்ரீ சுவாமிகள் உட்கார்ந்து இருந்த திண்ணை அருகில் சென்று திரையை விலக்கிப் பார்த்தேன். ஸ்ரீ சுவாமிகள் நித்திரை செய்து கொண்டிருப்பார் என்று நான் திரையை விலக்கினேன். ஆனால் ஸ்ரீ சுவாமிகள் உட்கார்ந்து கொண்டு இருந்தார். இக்காட்சியை நான் கண்டதும் பயந்து போய்விட்டேன்.

திரு. சுப்பிரமணிய சுவாமி திண்ணைக்கு அருகில் படுத்து தூங்கிக் கொண்டிருந்தார். அவரை எழுப்ப என் மனம் இடம் தரவில்லை. என்னைப் பார்த்தவுடன், சுப்பிரமணி, சுப்பிரமணி என்று ஸ்ரீ சுவாமிகள் அழைத்தார். நான் உடனே ஸ்ரீ சுப்பிரமணி சாமியை எழுப்பினேன். ஸ்ரீ சுவாமிகள் கூப்பிடுகிறார் என்று சொன்னேன்.

திரு. சுப்பிரமணிய சாமியும் அலறி அடித்துக் கொண்டு, பயத்துடன் ஸ்ரீ சுவாமிகளைப் பிடித்ததும், எதிர்பாராத விதமாக ஸ்ரீ சுவாமிகள் சொன்னதாவது, உட்காருவதும், எழுந்திருப்பதும் எதற்கு? ஒரே வழியாக அபிஷேகம் செய்து விடலாம் என்று ஸ்ரீ சுவாமிகள் சொன்னார்.

திரு. சுப்பிரமணிய சாமியும் , நானும் ஸ்ரீ சுவாமிகளின் இவ்வார்த்தைகளை எதிர்ப்பார்க்காத நிலையில், திகில் அடைந்து போய், நாங்கள் இருவரும் ஐய்யோ, ஐய்யோ என்று பதற்றம் அடைந்தோம்.

ஸ்ரீ சுவாமிகள் இறுதிக்கட்டம் நெருங்கி விட்டது. இதை யார் தடுக்க முடியும்? என்று நான் நினைத்தேன். ஒரே வழியாய் அபிஷேகம் செய்து விடலாம் என்று ஸ்ரீ சுவாமிகளே கூறும்போது, எந்த நாள், எந்த நேரம், என்று சொல்லவில்லை. திரு. சுப்பிரமணிய சாமிக்கும், எனக்கும் இந்த விஷயத்தை மறுபடியும் ஸ்ரீ சுவாமிகளிடம் கேட்டு தெரிந்து கொள்ளும் மனநிலை வரவே இல்லை. துக்ககரமான விஷயத்தை எப்படி கேட்க முடியும்?

“தங்களை கடவுளாக நினைத்து, நம்பி, வணங்கி வாழும் எனக்கு, எனனுடைய எதிர்காலம் என்னாவது சாமி?” என்று மனதில் நினைத்து, வருந்தினேன். ஸ்ரீ சுவாமிகளை வாய்விட்டு என்னால் கேட்க முடியாமல் தள்ளாடினேன். ஸ்ரீ சுவாமிகள் நான் மனதில் வருத்தப்பட்டதை தெரிந்து கொண்டு, அவர் சொன்ன பதில் பெரியவங்க தரிசனம் ஒன்றும் பேசவில்லை. என்னாலும் ஒன்றும் கேட்க முடியாமல் திகைத்துப்போனேன். ஸ்ரீ சுவாமிகள் புதன்கிழமை இரவு 12 மணிக்குமேல் தன் சமாதி நிலையை வெளிப்படுத்தியவர், வியாழக்கிழமை ஒருநாள் இருந்தார். வெள்ளிக்கிழமை காலை சமாதியடைந்து விட்டார். பெரியவங்க தரிசனம் எப்போதும் நல்லது என்று சொன்னதுதான் ஸ்ரீ சுவாமிகள் என்னிடம் கடைசியாக பேசிய வார்த்தை.

“பெரியவங்க தரிசனம் எப்போதும் நல்லது” என்று சொன்னவர், என் தரிசனம் உனக்கு எப்போதும் நல்லது என்று சொல்லி, ஸ்ரீ சுவாமிகள் தன்னைக் காட்டிக் கொள்ளவில்லை. இப்படிப்பட்ட உத்தம ஞானி ஒருவரை நான் கண்டதில்லை.

## ஸ்ரீ பூண்டி மகான் ஆற்று சுவாமிகள் மலர் கொடுத்தது

இரவு பூசை முடிந்த பின்பு, சில சமயங்களில் ஸ்ரீ சுவாமிகளின் படுக்கையில் மலர்களைத் தூவி ஸ்ரீ சுவாமிகளை படுக்க வைப்பதுண்டு. திண்ணையைச் சுற்றிலும் பூக்கள் தூவப்பட்டு, அதன் மேல் ஸ்ரீ சுவாமிகள் அமர்ந்து இருந்தார். ஒரு பக்தர் ஒரு நாள் ஸ்ரீ சுவாமிகளை வணங்கி “பூ” ஒன்று தருமாறு வேண்டி நின்றார். நானும் அந்த சமயத்தில் அந்த பக்தர் அருகில் நின்றிருந்தேன். ஸ்ரீ சுவாமிகளை சுற்றிலும் பூக்கள் நிறைய இருந்த போதிலும், ஸ்ரீ சுவாமிகள் பூக்கள் மீது கை வைத்து அங்கும் இங்குமாக பூக்களை தேடுவது போல் செய்துவிட்டு, ஒரு பூவை எடுத்து அந்த பக்தரிடம் கொடுத்தார். அந்தப் பூவை பெற்றுக்கொண்டு அந்த பக்தர் சென்றுவிட்டார்.

இதுவரை நான் ஒரு “பூ” கூட ஸ்ரீ சுவாமிகளிடம் வாங்கவில்லையே என்று நினைத்தேன். எனக்கும் ஸ்ரீ சுவாமிகளிடம் “பூ” வாங்க வேண்டுமென்று ஆசை வந்தது. நான் ஸ்ரீ சுவாமிகளை வணங்கி எனக்கும் “பூ” வேண்டுமென்று ஸ்ரீ சுவாமியை கேட்காமல், எனக்கு “பூ” இல்லையா சாமி என்று உரிமையுடன் கேட்டேன்.

நானும், ஸ்ரீ சுவாமிகளிடம் “பூ” ஒன்று கேட்கப் போகிறேன் என்று முன்பே அறிந்து கொண்டே ஸ்ரீ சுவாமிகள் ஒரு பூவை எடுத்து அவர் மடிமேல் வைத்திருந்தார். இதை நான் கவனிக்கவில்லை. நான் பூ கேட்டவுடன் ஸ்ரீ சுவாமிகள் அவர் மடிமீது வைத்திருந்த “பூ” ஒன்றை கண்ஜாடை காட்டி என்னை எடுத்துக் கொள்ளுமாறு தெரிவித்தார். இதனால் நான எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தேன்.

ஸ்ரீ சுவாமிகள் பூவை எடுத்து என் கையில் கொடுக்காமல் கண் ஜாடை காண்பித்து அவர் மடியிலுள்ள பூவை, என்னை எடுத்துக்கொள்ளுமாறு தெரிவித்தார். இதில் புதைந்துள்ள கருணை என்னவென்றால், மற்ற பக்தர்கள் “பூவை” ஸ்ரீ சுவாமிகளிடம் கேட்டுப் பெறுவது போல் அல்லாமல், ஸ்ரீ சுவாமிகளின் மடியிலுள்ள “பூவை” நானே எடுத்துக் கொள்ளும் உரிமையை, ஸ்ரீ சுவாமிகள் எனக்களித்தார் என்பதே. எனக்கு “பூ” கிடைக்குமா அல்லது கிடைக்காதா என்ற ஐயப்பாட்டிற்கே அங்கு இடமில்லையென்று ஸ்ரீ சுவாமிகள் தெளிவுப்படுத்தினார். ஸ்ரீ சுவாமிகளின் கருணைக்கு எல்லையே இல்லை என்பதை இந்நிகழ்ச்சி மூலம் நான் தெரிந்து கொண்டேன்.

## போளூர் B.D.O அவர்களைச் சந்திக்க சென்றபோது ஸ்ரீ சுவாமிகள் என்னுடன் வந்தது.

ஒருநாள் நான் ஸ்ரீ சுவாமிகளின் தரிசனம் கண்டுவிட்டு, போளூர் B.D.O அவர்களை சந்திக்கச் சென்றேன்.

B.D.O அலுவலக அறைக்குள் நுழைந்தேன். நான் யார் என்பதும், எங்கிருந்து வருகிறேன் என்பதும் B.D.O அவர்களுக்குத் தெரியாது.

நான் அவர் அறைக்குள் நுழையும்போதே, திடீரென்று வாசனை வந்தது. பூண்டியில் ஸ்ரீ சுவாமிகள் இருக்கும் இடத்தில் உள்ள வாசனை போல் இருக்கிறதே என்று B.D.O அவர்கள் ஆச்சிரியப்பட்டார். B.D.O அவர்களைப் பார்த்து நான் E.O (C) ஆகப் பணிப்புரிகிறேன். “ஸ்ரீ பூண்டி மகானின் தரிசனம் பெற்று விட்டு பூண்டியிலிருந்து வருகிறேன்” என்று சொன்னேன். அதற்கு B.D.O அவர்கள், “நீங்கள் தான் ஸ்ரீ சுவாமிகளின் பக்தராக இருக்கும் E.O. (C) என்று அலுவலரா. நான் இப்போதுதான் உங்களை முதன் முறையாக பாாக்கிறேன். ஸ்ரீ சுவாமிகள் பூண்டியிலிருந்து உங்கள் கூடவே வந்திருக்கின்றார். அதனால் தான நீங்கள் வந்ததும், பூண்டியில் ஸ்ரீ சுவாமிகளிடம் உள்ள வாசனை இப்போது இந்த இடத்தில் வருகிறது" என்று B.D.O ஆச்சரியப்பட்டுக் கொண்டே சொன்னார்.

## மாத பௌர்ணமி பூசைக்கு நான் தாமதமாக வந்த விஷயம்

ஒரு மாத பௌர்ணமி பூசைக்கு என்னால் போகமுடியவில்லை. நான் போளூரில் இருந்தேன். போளூரிலிருந்து பூண்டிக்கு போக முடியாமல் தாமதம் ஏற்பட்டது. அந்த பௌர்ணமி பூசையில் ஸ்ரீ சுவாமிகளின் தரிசனம் பெற முடியாமல் தடை ஏற்பட்டு விட்டதே என்று கவலைப்பட்டேன். பூசை முடிந்த பிறகு, தாமதமாக ஸ்ரீ சுவாமிகளின் தரிசனம் பெற அவரிடம் சென்று வணங்கினேன். அப்போது திரு. சுப்பிரமணியசாமியும் அங்கிருந்தார். நான் ஸ்ரீ சுவாமிகளை வணங்கி நின்றபோது, "என்னா சாமி ! E.O (C) பூசை முடிந்ததும் வருகிறார்" என்று திரு. சுப்பிரமணிய சாமி கேட்டார். "அவர் முன்பே வந்து போய்விட்டார்" – பா என்று ஸ்ரீ சுவாமிகள் பதில் கூறினார். நான் போளூரில் இருந்து கொண்டு பூசைக்கு வரமுடியாமல் தவித்ததை ஸ்ரீ சுவாமிகள் முன்பே அறிந்து கொண்டார். நான் போளூரில் இருக்கும்போது, என் மனம் முன்பே, பூசைக்கு வந்துபோய் விட்டது என்பதை, ஸ்ரீ சுவாமிகள் உணர்த்தினார்.

ஸ்ரீ சுவாமிகள் ஓய்வில்லாம் எல்லா விஷயங்களையும் திண்ணையில் உட்கார்ந்து கொண்டே பார்த்து கொண்டிருக்கின்றார் என்பதற்கு இது ஒரு சான்றாக இருக்கிறது.

## ஒரு ஆங்கிலேயர் கேட்ட கேள்வி

ஒரு நாள் ஆங்கிலேயர் ஒருவர், ஸ்ரீ சுவாமிகளிடம் கேள்வி கேட்டார்.

**கேள்வி :** How to Control Angry? (அதாவது கோபத்தை அடக்குவது எப்படி?)

**ஸ்ரீ சுவாமிகள் அளித்த பதில் :** "G.O. Going" என்று சொன்னார். ஆங்கிலேய பக்தருக்கு ஒன்றும் புரியவில்லை. எனக்கும் ஒன்றும் புரியவில்லை. எனக்கும் ஒன்றும் புரியவில்லை. G.O என்றுதும் Government Order தான் எனக்கு நினைவுக்கு வந்தது. பக்தர் கேட்ட கேள்விக்கும் ஸ்ரீ சுவாமிகள் அளித்த பதிலுக்கும் என்ன சம்மந்தம் என்று புரியவில்லை. கேள்வி கேட்ட பக்தருக்கும் ஒன்றும் புரியாமல் சென்று விட்டார். இவ்விஷயத்தைப் பற்றி நானும் திரு. விஜயரங்கன், அவர்களும் ஸ்ரீ சுவாமிகளிடம் மீண்டும் கேட்டோம். அதற்கு ஸ்ரீ சுவாமிகள், நகைச்சுவையாக G.O.என்றால் go going என்றார். அவரை போகச்சொன்னேன் என்று சொன்னார். நாங்கள் இருவரும் சிரித்தோம். ஸ்ரீ சுவாமிகளும் சிரித்தார்.

மீண்டும் நாங்கள் இருவரும் "கோபத்தை அடக்குவதற்கு என்ன வழி" என்று ஸ்ரீ சுவாமிகளிடம் கேட்டோம்.

**பதில் :** ஸ்ரீ சுவாமிகள் "பஞ்சேந்திரங்களையும்" அடக்க வேண்டுமென்று தெரிவித்தார்.

**கேள்வி:** பஞ்சேந்திரங்களையும் எப்படி சாமி அடக்குவது என்று கேட்டோம்.

**பதில் :** மனதை அடக்க வேண்டும். பா !

**கேள்வி:** மனதை எப்படி சாமி அடக்குவது?

**பதில் :** மனோ நாசம் செய்து பழக்க வேண்டும் – பா.

**கேள்வி:** மனோநாசம் எப்படி சாமி செய்வது?

**பதில்:** எவ்வெந் நினைவுகள் எந்த எந்த ஸ்தானத்தில் உற்பத்தியாகின்றனவோ, அந்த நினைவுகளையெல்லாம், எழுச்சி பெறவுடாமல் தடுத்து நிறுத்தி, அந்த உற்பத்தி ஸ்தானத்திலேயே கனக்கி போடணும்பா.

## விளக்கம்

நினைவுகள் ( எண்ணங்கள் ) தோன்றும் போதே, அவைகளை அபிவிருத்தி செய்து, அந்த எண்ணங்களின்படி செயல்படாமல், மனதைக் கட்டுப்படுத்தி, மனதினால் தூண்டப்பட்ட செயல்களை தடுத்து நிறுத்தி, கடடுப்பாடு செய்ய வேண்டும். அதற்குத்தான் "நினைவுகளை எழுச்சி பெறவிடாமல் தடுத்து நிறுத்த வேண்டும்" என்று ஸ்ரீ சுவாமிகள் கூறுகின்றார். இதுவே மனோநாசம் செய்யும் முறையாகும்.

அவ்வப்போது உலக விவகாரங்களிலும், குடும்ப விவகாரங்களிலும், நாம் ஈடுபடும்போது, அந்த எண்ணப்படி நடந்து காரியங்களை நடத்தி முடிக்க, மனம் முயற்சியுடன் ஈடுபடுகிறது. இதுவே மக்களின் வாழ்க்கை முறையாக அமைந்துள்ளது.

துறவறம் பூண்டவர்களுக்கு "மனோநாசம்" செய்தல் மிகவும் முக்கியமான பயிற்சியாகும். இந்த பயிற்சியில் ஈடுபட்டால்தான் எண்ணங்கள் நாசமடையும். இந்த பயிற்சியை தொடர்ந்து மேற்கொள்ளும் துறவிக்கு மனம் அடங்கும் வாய்ப்புள்ளது. தொடர்ந்து மனோநாசம் செய்து பழகும்போது பஞ்சேந்திரங்களும் அடங்கி, மனமும் அடங்கி, ஆத்ம விசாரணையில் மனம் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படுகிறது. தொடர்ந்து ஆத்ம விசாரணையில் ஈடுபட்ட மனம், ஆத்ம தரிசனத்தைப் பெற்று ஆன்மாவில் லயமாகி ஆன்மாவை உணர்கிறது. ஆகையால், துறவிகள் மனோநாசம் செய்து பழகினால்தான் ஆத்ம ஞானத்தை பெறமுடியும்.

இல்லற வாழ்வில் இருப்பவர்களும், உலக பற்று வைத்து வாழ்பவர்களும், "மனோநாசம்" செய்யும் பயிற்சியை கடைப்பிடிக்காமல், ஆத்ம ஞானம் பெற இயலாது. அதனால் தான் ஸ்ரீ சுவாமிகள் எண்ணங்களையும், கோபத்தையும் அடக்கி மனப்பக்குவம் பெற "மனோநாசம்" செய்ய வேண்டும் என்று திருவாய் மலர்ந்தருளினார்.

## ஆரியக்கூத்தும், காரியக்கூத்தும்

ஒருநாள் ஸ்ரீ சுவாமிகளின் தரிசனம் பெற அவர் அருகில் சென்று வணங்கி நின்றிருந்தேன். அப்போது ஸ்ரீ சுவாமிகள் எனக்கு கூறிய உபதேசம் என்னவென்றால் "காரியக் கூத்தாடினாலும் ஆரியக் கூத்தில் கண் வைக்க வேணும்பா" என்றார்.

## விளக்கம்

காரியம் நடப்பதற்கு ஆடும் கூத்து "காரியக்கூத்து" ஆரியம் (கடவுள் வழிபாடு) நடப்பதற்கு ஆடும் கூத்து ஆரியக்கூத்து. "ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தில்" கண் வைக்க வேண்டும் என்று மக்கள் எண்ணி, காரியம்தான் முக்கியம் என்று நினைத்து வாழ்கிறார்கள்.

ஆனால் ஆன்மீகவாதிக்கு (ஆத்ம சிந்தனை செய்பவருக்கு ) எது முக்கியம்? "ஆரியம் தான் முக்கியம்". எனவே, ஆன்மீகவாதி ஆத்ம சிந்தனைக்கு முக்கியம் கொடுத்துக்கொண்டே, காரியங்களில் ஈடுபட வேண்டும். அதற்குப் பதிலாக காரியங்களில் ஈடுபாட்டைக் குறைத்துக் கொண்டு, ஆத்ம சிந்தனையை தீவிரப்படுத்த வேண்டும்; ஆத்ம சிந்தனையை இடைவிடாமல் முயற்சி செய்து வாழ வேண்டும்.

எனக்கு ஆத்ம சிந்தனைதான் முக்கியம்; அதை இடைவிடாமல் பயிற்சி செய்ய வேண்டும் என்று ஸ்ரீ சுவாமிகள் வலியுறுத்திக் கூறினார்.

ஆன்மீக வாழ்வில் ஆத்ம ஞானம் பெறுவதையே குறிக்கோளாக கொண்டவர்கள், காரியக்கூத்தை விட "ஆரியக் கூத்தில் தான் எப்போதும் கவனமாக இருக்க வேண்டும்" என்று ஸ்ரீ சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளினார்.

## ஸ்ரீ சுவாமிகளின் மூக்கிலிருந்து சளி ஒழுகிக் கொண்டிருந்த விஷயம்:

ஒரு சமயம் நான் ஸ்ரீ சுவாமிகளின் தரிசனம் பெறுவதற்கு அவரிடம் சென்று வணங்கி நின்றேன். அப்போது அவருக்கு ஜலதோஷம் இருந்ததால், மூக்கிலிருந்து சளி அதிகமாக ஒழுகி கொண்டிருந்தது. ஸ்ரீ சுவாமிகள் அதைப்பற்றி சிந்தனையற்றவராக வீற்றிருந்தார். எந்த செயல்களையும் அவர் தனக்கென்று செய்து கொள்வதில்லை.

இந்த நிலையில் இருப்பவர்களுக்கு நாம்தானே செய்ய வேண்டும் என்ற எண்ணம் எனக்கு, மேலோங்கியது. உடனே ஸ்ரீ சுவாமிகளின் மடி மீதிருந்த வேட்டியை எடுத்து, அவரது மூக்கிலிலுள்ள சளியை துடைக்க முயற்சி செய்தேன். நான் வேட்டியை அவர் மடியிலிருந்து எடுக்கும் போது, ஸ்ரீ சுவாமிகள் அதை இழுத்து வாங்கிக் கொண்டார்.

ஸ்ரீ சுவாமிகள் வேட்டியை வாங்கிக் கொண்டதால், நாம் அந்த பணியை செய்யாமலை விட்டுவிட முடியுமா? உடனே நான் உடுத்துக் கொண்டிருந்த வேட்டியை எடுத்து ஸ்ரீ சுவாமிகளின் மூக்கில் உள்ள சளியைத் துடைத்தேன்.

நான் பக்குவம் அடைந்தேனா இல்லையா என்பதை ஸ்ரீ சுவாமிகள் என்னை சோதனை செய்தார். இந்த சந்தர்ப்பம் நமக்கு கிடைத்தது எவ்வளவு பாக்கியம் என்று எண்ணி நான் மகிழ்ச்சியடைந்தேன்.

## என் தகப்பனாரின் வயிற்று வலியை ஸ்ரீ சுவாமிகள் குணப்படுத்தியது.

என் தகப்பனார் திருவண்ணாமலையில் இருந்தார். அவருக்கு தீராத வயிற்றுவலி இருந்தது. ஸ்ரீ சுவாமிகளின் தரிசனம் பெற்றால் வயிற்றுவலி தானாக போய்விடும், மருந்து சாப்பிடவேண்டாம் என்று அவரிடம் சொன்னேன். என் தகப்பனாரும், ஸ்ரீ சுவாமிகளின் ஆசிர்வாதம் பெற்றால் தன்னுடைய வயிற்றுவலி நீங்கிவிடும் என்று பரிபூர்ணமாக நம்பினார்.

ஒருநாள் என் தகப்பனாரை ஸ்ரீ சுவாமிகளின் தரிசனம் பெற, பூண்டிக்கு அழைத்து வந்தேன். நாங்கள் இருவரும் ஸ்ரீ சுவாமிகளின் அருகில் சென்று வணங்கினோம். நான் ஸ்ரீ சுவாமிகளிடம், என் தகப்பனாரை அறிமுகம் செய்யவில்லை. ஸ்ரீ சுவாமிகளுக்கு, என் தகப்பனார் வந்துள்ளார் என்பது, தெரியும் என்ற நம்பிக்கையில் இருந்தேன்.

என் தகப்பனார் “எனக்கு தீராத வயிற்றுவலி இருக்கிறது சுவாமி !, என்னால் தாங்க முடியவில்லை! அதை நீங்கள் தான் தீர்த்து வைக்க வேண்டும்” என்று சொன்னார்.

அதற்கு ஸ்ரீ சுவாமிகள் என் தகப்பனாரைப் பார்த்து “உன் வயிற்றுவலி குணமாவது உன்னிடம்தான் உள்ளது” என்று ஸ்ரீ சுவாமிகள் சொன்னார். என் தகப்பனாருக்கு வயிற்று வலி ஏற்படும் காரணம் தெரிவிக்காமல், என் தகப்பனார் தான் அதற்கு காரணம் என்று, ஸ்ரீ சுவாமிகள் சொன்னவுடன் என் தகப்பனாருக்கு சிரிப்பு வந்துவிட்டது. என் தகப்பனார், மது அருந்தும் பழக்கமுடையவர். அது தான காரணம் என்பதை, மற்றவர்கள் தெரிந்து கொள்ளாமல் இருப்பதற்கு இரகசியமாக உண்மையை என் தகப்பனாருக்கு சுட்டி காட்டினார். ஸ்ரீ சுவாமிகள் வாக்கின்படி, என் தகப்பனார் மது அருந்துவதை உடனே நிறுத்தி விட்டார். என் தகப்பனாரும் வயிற்று வலியிலிருந்து விடுபட்டார். மருந்து எதுவும் சாப்பிடாமலேயே ஸ்ரீ சுவாமிகளின் கருணையினால் வயிற்று வலியிலிருந்து பூரணகுணம் அடைந்து விட்டார்.

## ஸ்ரீ சுவாமிகள் அவருடைய வலது கையை எடுத்து அவருடைய வயிற்றின் வலது புறத்தில் வைத்து எனக்கு வினையிருப்பதை சுட்டி காண்பித்தது.

ஒரு நாள் நான் ஸ்ரீ சுவாமிகளை வணங்கிவிட்டு, அவர் எதிரில் நின்று, அவருடைய தரிசனத்தை நீண்ட நேரம் உற்று பார்த்துக் கொண்டு பரவசமாக இருந்தேன். அந்த நேரத்தில் ஸ்ரீ சுவாமிகள் படுத்துக் கொண்டிருந்தார். ஸ்ரீ சுவாமிகளின் திருவாயிலிருந்து அம்மா, அம்மா என்ற சொல் வந்தது. ஸ்ரீ சுவாமிகளுக்கு ஏதோ உபாதை இருக்கின்றது என்று நான் நினைத்து மனம் வருந்தி பார்த்துக் கொண்டிருந்தேன்.

அதை ஸ்ரீ சுவாமிகள் தெரிந்து கொண்டு, அவருடைய வலது கையை எடுத்து வயிற்றின் வலது புறத்தில் வைத்து தொட்டு காண்பித்தார். எனக்கு ஒன்றும் புரியாமல் நிள்று கொண்டிருந்தேன். அதன் பிறகு ஸ்ரீ சுவாமிகளிடம் விடை பெற்று திரும்பினேன் .

என் வீட்டிற்கு சென்றதும் ,திடீரென்று என் வயிற்றின் வலது பக்கம், வலி ஏற்பட்டது. வயிறும வீங்கி விட்டது. எனக்குதான் வயிற்றின் வலி இருக்கிறது என்பதை முன்பே ஸ்ரீ சுவாமி கைவைத்து காண்பித்துள்ளார் என்ற விஷயம் அப்போதும் எனக்குப் புரியவில்லை.

பிறகு டாக்டரிடம் காண்பித்து, பரிசோதனை செய்து, ஸ்கேன் செய்து பார்த்தவுடன், எனக்கு கல்லீரலில் கட்டி இருப்பது தெரியவந்தது. கல்லீரலில் கட்டி இருந்தால் பிழைப்பது

கடினம். ஸ்ரீ சுவாமிகள் என் மீது கருணை வைத்து கல்லீரலில் கட்டி இருப்பதை முன்பே அறிந்து கொண்டு பின்னால் வரப்போகும் ஆபத்தை சுட்டிக் காட்டியதுடன் என்னைக் காப்பாற்றி எனக்கு மறுஜென்மம் கொடுத்தார். இதை என்னால் என்வாழ்நாளில் மறக்கவே முடியாது. கல்லீரலில் இருக்கும் கட்டியை முன்பே ஸ்ரீசுவாமிகள் உணர்த்தியிருந்தால், நான் பயப்படுவேன் என்று அதை மறைத்து, அப்போதே அதற்கு நிவாரணமும் செய்து விட்டார். ஸ்ரீ சுவாமிகள் எனக்கு உயிர்பிச்சை கொடுத்து என்னைக் காப்பாற்றியதால், என்றென்றும் ஸ்ரீ சுவாமிகளுக்கு நான் அடிமையாக இருக்கின்றேன்.

## என் தாயார் என்னுடைய தம்பியின் திருமணம் பற்றி விசாரித்தது

என் தாயார் திருவண்ணாமலையில் இருந்தார். என்னுடைய தம்பிக்கு திருமணம் செய்வது குறித்து ஸ்ரீ சுவாமிகளிடம், விசாரிக்க வேண்டுமென்று விரும்பினார். நானும், என் தாயாரும், ஒரு நாள் பூண்டிக்கு வந்து ஸ்ரீ சுவாமிகளின் அருகில் சென்று வணங்கி நின்றோம். என் தாயார் ஸ்ரீ சுவாமிகளைப் பார்த்து “கஸ்தம்பாடியில் பெண் இருக்கின்றது. அந்த பெண்ணை என் மகனுக்கு திருமணம் செய்து வைக்கலாமா சுவாமி” என்று கேட்டார். அதற்கு ஸ்ரீ சுவாமிகள், “நாம் நினைத்தது எல்லாம் முடியுமாம்மா” என்று பதில் சொன்னார்.

நாம் நினைத்தது எல்லாம் முடியாது, என்ற உண்டிமையை என் தாயார் உணர்ந்து கொண்டார். ஸ்ரீ சுவாமிகள் எப்போதும் “முடியாது, ஆகாது, நடக்காது” என்ற நிஷ்டூர வாக்குகளை அளித்தது கிடையாது. ஆகையால் தான், முடியாது என்பதை சொல்லக் கூடாது என்று கருதியே ஸ்ரீ சுவாமிகள் “நினைத்தது எல்லாம் முடியுமா” என கேள்வி கேட்டு பதில் அளித்தார்.

## ஸ்ரீ பூண்டி சற்குருநாதர் தோத்திரம்

நான் குருதோத்திரம் சொல்லி ஸ்ரீ பூண்டிமகான் சற்குருநாதரை வழிபடவேண்டும் என்று அடிக்கடி சிந்தித்து வந்தேன். ஆனால் ஸ்ரீ சுவாமிகளிடம் சென்று வணங்கி அருள்புரிய வேண்டும் என்று கேட்டதில்லை. என் எண்ணங்களை ஸ்ரீ சுவாமிகள் அறிந்து, என்னை ஆட்கொண்டு பாடவைத்த தோத்திரபாடல்களை, இங்கு குறிப்பிடுகின்றேன். இந்த பாடல்களை, ஸ்ரீ பூண்டி மகான் தேவாலயத்தில் பலமுறை பாடியுள்ளேன். ஸ்ரீ சுவாமிகளுக்கு பூசை நடக்கும் போதும் பலமுறை பாடியுள்ளேன். வாசகர்களும் இந்த தோத்திரத்தை சொல்லி, பூசை செய்து வந்தால், ஆன்மீக உறவு பெற்று பல நன்மைகளையும், அடைவார்கள் என்று ஸ்ரீ பூண்டி மகான் சற்குரு நாதரை வணங்கி, அன்புடனும் பணிவுடனும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சற்குரு ஸ்ரீ பூண்டி மகான் அருளால் எனக்கு மனதில் உதித்த தோத்திரப்பாடல்களை பல சமயங்களில் ஸ்ரீ சுவாமிகளுக்கி முன்நின்று பாடும்போது ஸ்ரீ சுவாமிகள் தவத்தில் இருப்பார். தோத்திரப் பாடல்களை பாடி முடித்த பின்பு, என் மனதில் வேண்டுதல் செய்வேன். அந்த வேண்டுதலுக்கு பதில் ஸ்ரீ சுவாமிகள் சொன்னது. ஏம்பா கால நேரம் வரவேண்டாமா? அவசரப்பட்டா, முடியுமா? அந்த வேண்டுதல் என்னவென்று இதுவரை யாரிடமும் நான் தெரிவிக்கவில்லை. இரகசியமாகவே வைத்திருந்தேன். தற்பொழுது இந்நூலில் ஸ்ரீ சற்குருநாதர் அனுமதியுடன் என் வேண்டுதலை கீழே குறிப்பிடுகிறேன்.

## வேண்டுதல்

“ஸ்ரீ சற்குருநாதா என்னுடைய கொடிய சிந்தனை களெல்லாம் அகன்று

சதா தங்களை தூய்மையுடன் நிஷ்காமியமாக பூஜிக்கும் பரிபக்கவ நிலைப்பெற்று

தங்கள் மலப் பிரசாதம உண்டு, என்னுடைய மூன்று பல தோஷங்களும் நிவர்த்தியடைந்து

பஞ்சேந்திரங்களையும் அடக்கும் உபாயத்தைப் பெற்று

பந்த பாசத்தை விட்டு, தன்னைத் தானே உணரும் வகைப்பெற்று

நிர்விகற்ப சமாதி வாய்க்கப்பெற்று இறைவனொடு ஐக்கியமடைய அருள்புரிவாய் அப்பனே ”